| TNVR130002192026 | சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை<br>முன்னிலை–திரு.ஆர்.சதீஷ், எம்.எல்.,<br>சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை<br>2026 ம் ஆண்டு ஜூன் மாதம் 25 ம் நாள் வியாழக்கிழமை<br>**அ.வ.எண்.90/2026** |
|---|---|

பா.நாகராஜன் ... வாதி

/எதிர்/

எஸ்.ஜானகி ... பிரதிவாதி

இவ்வழக்கு 25.06.2026 ம் தேதி அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.இ.வீரராஜ் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் யாரும் ஆஜராகாததால் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ள நிலையிலும், மேலும், வாதி தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

**தீர்ப்புரை**

வாதிக்கு பிரதிவாதி செலுத்தவேண்டிய தொகை ரூ.1,55,600/–ம் மேற்படி தொகைக்கு பிராது தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதிவரை 12% பின்வட்டி சேர்த்து செலுத்தக்கோரியும் மற்றும் வழக்கின் செலவுத்தொகை கோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்:–**

வாதியிடம் பிரதிவாதி கடந்த 22.11.2023 ம் தேதி ரொக்கமாக ரூ.1,00,000/– குடும்ப செலவிற்காகவும், சில்லரை கடன்களை தீர்ப்பதற்காகவும் கடன் தொகை பெற்றுக்கொண்டு ஷை கடனுக்கு ஆதரவாக அதே தேதியில் சாட்சிகள் முன்னிலையில் ஒரு புரோநோட்டை வாதிக்கு பிரதிவாதி எழுதி கொடுத்துள்ளார். புரோநோட்டில் ரூ.100/–க்கு மாதம் ஒன்றுக்கு வட்டி ரூபாய் 2% தருவதாக சரத்து ஏற்படுத்தி பிரதிவாதி புரோநோட்டு எழுதி கொடுத்துள்ளார். பிரதிவாதி கடன்

பெற்ற நாளிலிருந்து நாளது தேதிவரை அசல் தொகையோ, வட்டி தொகையோ எவ்வித தொகையும் செலுத்தவில்லை. வாதி கடன் தொகையை பிரதிவாதியிடம் நேரிலும் ஆட்கள் மூலமும் துயர்ந்ததில் கடன் தொகையை தருவதாக ஒப்புக்கொண்டு வீண் காலதாமதம் செய்து வருகிறார். இந்நிலையில் வாதி பிரதிவாதிக்கு கடந்த 23.01.2026 ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதை பெற்றுக்கொண்ட பிரதிவாதி எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை. எனவே வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்தக் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல்.

**3.இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவெனில்,**

வாதி கோரியுள்ள புரோநோட்டு தொகை மற்றும் அதற்குரிய வட்டி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா என்பதேயாகும்.

**4.** இவ்வழக்கில் வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில், இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வாதிதரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் யாரும் ஆஜராகாததால் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், பிரதிவாதி தரப்பில் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் எதுவும் முன்னிறுத்தப்படவில்லை.

**5.** வாதி தரப்பில், வாதியிடம் பிரதிவாதி கடந்த 22.11.2023 ம் தேதி ரொக்கமாக ரூ.1,00,000/- குடும்ப செலவிற்காகவும், சில்லரை கடன்களை தீர்ப்பதற்காகவும் கடன் தொகை பெற்றுக்கொண்டு மேற்படி தொகைக்கு ரூ.100/-க்கு மாதம் ஒன்றுக்கு ரூ.2/- வீதம் வட்டி தருவதாக ஒப்புக்கொண்டு ஷை கடனுக்கு ஆதரவாக அதே தேதியில் சாட்சிகள் முன்னிலையில் ஒரு புரோநோட்டை வாதிக்கு பிரதிவாதி எழுதி கொடுத்துள்ளதாகவும், பிரதிவாதி கடன் பெற்ற நாளிலிருந்து நாளது தேதிவரை அசல் தொகையோ, வட்டி

தொகையோ எவ்வித தொகையும் செலுத்தவில்லை எனவும், வாதி கடன் தொகையை பிரதிவாதியிடம் நேரிலும் ஆட்கள் மூலமும் துயர்ந்ததில் கடன் தொகையை தருவதாக ஒப்புக்கொண்டு வீண் காலதாமதம் செய்து வருவதாகவும், இந்நிலையில் வாதி பிரதிவாதிக்கு கடந்த 23.01.2026ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதை பெற்றுக்கொண்ட பிரதிவாதி எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை எனவும், எனவே வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்தக் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

**6.** மேலும், வாதி தரப்பில் அவரது வழக்கை நிரூபிக்கும் வகையில் தன்னை வா.சா.1ஆக விசாரித்துக் கொண்டு, வாதிதரப்பு வழக்கு குறித்து சாட்சியம் அளித்து வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்யும்பொழுது, 22.11.2023 அன்று வாதியிடம் பிரதிவாதி ரூ.1,00,000/- கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக சாட்சிகள் முன்னிலையில் புரோநோட்டு ஒன்றை எழுதி கொடுத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கையில், மேற்படி புரோநோட்டு கடனை பிரதிவாதி வாதியிடம் செலுத்தாததால் மேற்படி புரோநோட்டு கடன் தொகைகளை செலுத்தும்படி வாதி பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பி அதை பிரதிவாதி பெற்றுக் கொண்டுள்ளார் என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கையில், வாதியின் முகவரி மற்றும் அடையாளத்தை காட்டக்கூடிய ஆவணமாக காணப்படுகிறது.

**7.** வா.சா.ஆ.1 புரோநோட்டின் அடிப்படையில் பிரதிவாதி வா.சா.ஆ.1ல் கண்ட தொகை ரூ.1,00,000/-த்தை கடனாக பெற்றுக்கொண்டு, மேற்படி தொகையை திரும்ப செலுத்தாமல் இருந்ததால், மேற்படி புரோநோட்டு கடன் தொகையை திரும்ப கேட்டு வாதி பிரதிவாதிக்கு வா.சா.ஆ.2 வழக்கறிஞர்

அறிவிப்பு அனுப்பி, பிரதிவாதி அதை வா.சா.ஆ.3 ன்மூலம் பெற்றுக் கொண்டுள்ளார் என்பதனையும் வாதிக்கு பிரதிவாதி இன்றுவரை யாதொரு தொகையும் தராமல் வீண் காலம் கடத்தி வருகின்றார் என்பதனையும் அறியமுடிகிறது. மேலும் பிரதிவாதி வாதியிடம் புரோநோட்டு கடனாக பெற்ற தொகைக்காக நாளது தேதிவரை திரும்ப செலுத்தவில்லை என்பதையும் அறியமுடிகிறது.

**8.** மேலும் வாதி அனுப்பிய அறிவிப்பில் 15 தினங்களுக்குள் வாதியிடம் பிரதிவாதி பெற்றுக்கொண்ட புரோநோட்டு கடன் தொகைகளை வாதியின் வசம் செலுத்த வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் வாதி தரப்பில் பிரதிவாதி மீது சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அனுப்பி வைத்துள்ளார் என்பதும் மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்யும்பொழுது தெரிய வருகிறது.

**9.** ஆகையால், வாதி தரப்பில் முன்னிறுத்தப்பட்ட வா.சா.1 ன் வாய்மொழி சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவண சாட்சியங்கள் மூலமும் பிரதிவாதி வாதியிடம் பெற்ற புரோநோட்டு கடன் தொகைக்கு நாளது தேதி வரை எவ்வித தொகையும் செலுத்தவில்லை என்றும் வாதி பிரதிவாதியிடம் மேற்படி தொகையை கேட்டதற்கு தருவதாகவே கூறி காலம் கடத்தி வருகின்றார் என்பதையும் அறிய முடிகிறது. வாதி அவரது தரப்பில் முதன்மை வழக்கு உள்ளது என்பதை போதிய வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியத்தின் அடிப்படையில் வழக்குரையை ஒத்து நிரூபணம் செய்துள்ளார். பிரதிவாதி மேற்படி வாதியின் வழக்கை மறுத்துரைக்கும் வகையில் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தோன்றாத் தரப்பினராகியுள்ளார். எனவே, வாதிக்குரிய புரோநோட்டு கடன் தொகை வட்டியுடன் வாதிக்கு கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**10.** முடிவாக, வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டிய தொகை

ரூ.1,55,600/−ம், அதில் அசல் தொகை ரூ.1,00,000/−க்கு பிராது தேதி முதல் தீர்ப்பாணை தேதிவரை ஆண்டுக்கு 9% வட்டியும், தீர்ப்பாணை தேதிமுதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதிவரை ஆண்டுக்கு 6% வட்டியும் வழங்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 25 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

SATHISH

Digitally signed by SATHISH
Date: 2026.06.25 19:42:44 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>வாதி தரப்பு சாட்சிகள் :</u>

வா.சா.1 நாகராஜன் (வாதி)

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1. | 22.11.2023 | வாதிக்கு பிரதிவாதி எழுதிக்கொடுத்த புரோநோட்டு |
| வா.சா.ஆ.2. | 23.01.2026 | வழக்கறிஞர் அறிவிப்பு |
| வா.சா.ஆ.3. | --- | அஞ்சலக ஒப்புதல் அட்டை |
| வா.சா.ஆ.4. | --- | வாதியின் ஆதார் அட்டையின் நகல் |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் :</u> இல்லை

<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை

SATHISH

Digitally signed by SATHISH
Date: 2026.06.25 19:42:50 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
அசல்வழக்கு எண்.90/2026
சீரான/வரைவு தீர்ப்புரை
நாள் : 25.06.2026